| O.S.No. 180/2023 | PW2 : திரு. ரவிச்சந்திரன்<br>த/பெ. திரு. நாராயணன் | 17-06-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>2, 7, 8 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. தாவா சொத்து 11 பேருக்கு உரிமையான சொத்து. தாவா சொத்து மனைப்பிரிவுகளாக பிரித்துக்கொள்வதற்கு வாங்கப்பட்ட சொத்து என்றால் இல்லை. நிலமாக பிரித்து வரப்பு கட்டிக்கொள்ளலாம் என்று வாங்கினோம். அவ்வாறு நிலமாக பிரித்து வரப்பு கட்டிக்கொண்டால் அதற்கு பொது வழி வராது என்ற விஷயம் தெரியுமா என்றால் தெரியும். நிலமாக பிரித்துக்கொள்வதற்காகத்தான் இந்த வழக்கினை நாங்கள் போட்டுள்ளோம். தாவா சொத்தில் முனுசாமியின் பாகத்தினை 1-ம் பிரதிவாதி கிரையம் வாங்கிக்கொண்டார். நான் பட்டுத்தறி தொழில் செய்கிறேன். நிலங்களாக பிரித்துக்கொள்ளவேண்டும் என்று எங்களுக்குள் ஏதேனும் உடன்படிக்கை உள்ளதா என்றால் அவ்வாறு ஏதும் இல்லை. நிலங்களாக பிரித்துக்கொள்வதற்கு பிரதிவாதிகளில் யார் ஒப்புக்கொள்ளவில்லை என்றால் நாராயணன் என்பவர் மட்டும் ஒப்புக்கொள்ளவில்லை, மீதமுள்ள நபர்கள் அனைவரும் ஒப்புக்கொண்டனர்.

2. தாவா சொத்து கூட்டு சொத்து என்பதால் யாரும் விற்பனை செய்ய முயற்சி செய்யவில்லை என்றாலும், விற்க முடியாது என்றாலும் சரிதான். தாவா சொத்து குறித்து பதிவாளர் அலுவலகம் சென்று பதிவாளரிடம் எதுவும் கேட்கவில்லை. தாவா சொத்துக்களை மனைப்பிரிவுகளாக பிரித்து DTCP Approval பெறவேண்டும் என்பதற்காகவே வாங்கப்பட்டது என்று நாராயணன், பார்த்தசாரதி, அன்பரசன் ஆகியோர் கூறுகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. DTCP Approval வாங்கவேண்டும் என்றால் நகராட்சியிடம் அனுமதி பெறவேண்டும் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நகராட்சியிடம் அனுமதி பெறவேண்டும் என்றால் அதிகப்படியான செலவாகும் என்பதால் தற்போது நான் மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மற்ற

பிரதிவாதிகளும் எங்களுடன் சேர்ந்துகொண்டு நான் சொல்வதையே சொல்கின்றனர் என்று சொன்னால் சரியல்ல.

3. தாவா சொத்து மனைப்பிரிவுளாக அரசு பதிவேட்டில் உள்ளது என்றாலும், நிலமாக இல்லை என்றாலும் சரியல்ல, நிலமாகத்தான் உள்ளது. தாவா சொத்துக்கு வழிகாட்டி மதிப்பு சதுர அடி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இல்லை, செண்டு கணக்கில்தான் உள்ளது. தாவா சொத்தினை சுற்றி ஏற்கனவே வீட்டு மனைப்பிரிவுகளாக உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தினை நிலங்களாக பிரிப்பதற்கு வாய்ப்பே இல்லை என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு நிலமாக பிரிக்கும்பட்சத்தில் அதன் உரிமையாளர்கள் யாரும் சரியாக அனுபவிக்க முடியாது என்று சொன்னால் சரியல்ல.

4. தாவா சொத்துக்கான மதிப்பீட்டினை தவறாக குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தினை மனைகளாக பிரித்துகொள்வதற்கு 2, 7, 8 பிரதிவாதிகளுக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்று சொன்னால் நீதிமன்றம் பிறப்பிக்கும் உத்தரவை செயல்படுத்த தயாராக உள்ளேன்.

**<u>மறு விசாரணை</u>** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்/- M. விக்னேஷ் பிரபு
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**